ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1784/12 - 2012 නොවැම්බර් මස 14 වැනි බදාදා - 2012.11.14
*1784/12 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

நியதிச்சட்ட முறையான விதிப்பு இல. : 4628.
விசேட இலக்கம் : மஹ/ 324.

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பின் குறைப்பை பூரணப்படுத்தல்*

அலவத்துகொடை, மாத்தளை வீதியில் 277 ஆம் இலக்க வீட்டில் வசிக்கும் திருமதி கமே குருன்னான்சேலாகே கெதர அப்புல் காதர் இச்மன் உம்மா மஹருப்பினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய ஒரு பகுதியை நிர்ணயித்து 1384/24 ஆம் இலக்க மற்றும் 2005.03.17 ஆந் திகதிய 4594 ஆம் இலக்க, நியதிச் சட்ட முறையான விதிப்பு இலக்கத்தின் கீழான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பெற்றுக்கொண்டுள்ளது. அந்த நியதிச் சட்ட முறையான விதிப்பின் குறைப்பை பூரணப்படுத்துவதற்காக (பெயரளவிற்கு) நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா,
தலைவர்,
காணிச்சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழு,
இல. சீ 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,
கொழும்பு 7,
2012, நவெம்பர் 12.

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தின் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவின் மாத்தளை, மெதசியப்பத்துவ சிறு பிரிவின் வாரியபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், அரசாங்க நிலஅளவையாளர் திரு. ஐ. கே. சமரகோன் அவர்களினால் வரையப்பட்ட 2011.01.14 ஆந் திகதி தளவரைப்பட இல. MA/LRC/2011/125 இல் காட்டப்பட்டுள்ளதுமான வாரியபொலத் தோட்டம் எனும் காணியில் A, B, C ஆகிய காணித்துண்டு இலக்கங்களில் காட்டப்பட்டுள்ளதுமான 2.4371 ஹெக்டேயார் (06 ஏக்கர் 00 றூ. 03.05 பேர்ச்சஸ்) அளவு கொண்ட காணிப்பகுதிகளும் அதனுள்ளடங்கிய சகலதும்.

11- 1031

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.